## ‘வாலிபப் பெரியார்’

# ஏ.வி.பி. ஆசைத்தம்பி 100-வது பிறந்த நாள்!

கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆனவர், பின்னாளில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரும்பணி ஆற்றியவர், ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள்!

தந்தை பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலே வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட இவரை ‘வாலிபப் பெரியார்’ என்று கழகத்தினர் அன்போடு அழைப்பார்கள்.

கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தன்னுடைய துணைவியாருடன் அந்தமான் சென்ற போது, தலையில் இரத்தக் குழாய் வெடித்ததில் 7.4.1979 அன்று ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள் உயிரிழந்தார்கள்.

**“தன்மான இயக்கத்தின் தளபதிகளில் ஒருவர்;**
**தி.மு.கழகத்தின் வலிமைமிக்க தூண்;**
**நிலைகுலையாத கொள்கை நெஞ்சம் கொண்டவர்;**
**அய்யாவின் தொண்டர்;**
**அண்ணாவின் அருமைத் தம்பி!**
**எனக்கு உற்ற தோழர்!**
**கழகத்தின் கருவூலம்,**
**தன்மான இயக்கத்தின் சிங்கம்,**
**நண்பர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நாவசைந்தால் நாடதிர வேங்கையின் முழக்கமன்றோ கேட்கும்!” -**

என்று, தன்னோடு இணைந்து கழகம் வளர்க்க உழைத்த ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் மறைந்தபோது, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் துயரம் நனைந்து இரங்கல் தெரிவித்தார்கள்.



24.09.1924 - 07.04.1979

ஆசைத்தம்பியைப் பற்றி இனமானப் பேராசிரியர் அவர்கள், “ஆசைத்தம்பியைப் போல, இன்னொருவரை ஈடாகச் சொல்ல முடியாது” என்று குறிப்பிடுவார்கள்.

இத்தகு பெருமைக்குரிய “வாலிபப் பெரியார்” ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களுக்கு நேற்று முன் தினம் (24.9.2023) 100வது பிறந்த நாள் ஆகும்.

‘ஆசைத்தம்பி’களின் தியாகத்தால் வளர்ந்த தன்றோ நமது கழகம்!

ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் 100வது பிறந்த நாளில்,

அவர்கள் கழகத்திற்குச் சிந்திய பேருழைப்பைப் போற்றுவோம்!

அவர்கள் அடியொற்றிக் கழகம் காத்திடச் சூளுரைப்போம்!

## “நின் புகழ் நீடு வாழ்க !”

# மகளிர் மசோதா எனும் வஞ்சகத் திட்டம்!

முதல்வர் உரை… 3-ஆம் பக்கத் தொடர்ச்சி

அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் ஒன்றிய அமைச்சர்களை திடீர் என்று சந்தித்தார்களே? சென்னையில் இருந்து சென்றால் தெரிந்து விடும் என்று, கொச்சியில் இருந்து சென்ற மர்ம சந்திப்புகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் என்ன? ஆட்சியில் இருந்தபோது மாநிலத்தின் நன்மைக்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு மூலமாக, தமிழ்நாட்டுக்கு அ.தி.மு.க கொண்டு வந்த நன்மை என்ன? எதுவும் இல்லை.

**ஒரே நாடு - ஒரே தேர்தலை ஆதரிக்கும் - பல்லக்குத் தூக்கி பழனிச்சாமி!**

இந்த லட்சணத்தில் ஒரே நாடு ஒரே தேர்தலை குப்புற விழுந்து ஆதரிக்கிறார் பல்லக்குத் தூக்கி பழனிசாமி. நன்றாக இருக்கிறதல்லவா இந்தப் ’பல்லக்குத் தூக்கி பழனிசாமி’ பட்டம்? என்ன அருகதையில் தமிழ்நாட்டு மக்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என்று பழனிசாமி பகல் கனவு காண்கிறார்? பழனிசாமி அவர்களே! சட்டமன்றத்துக்கும் சேர்த்து தேர்தல் வந்தால், உங்கள் கட்சி இப்போது இருக்கும் நிலைமைக்கு உள்ளதும் போய்விடும், ஜாக்கிரதை!

**கொத்தடிமைக் கூட்டத்துக்கு - படுதோல்வியை பரிசாகத் தாருங்கள்!**

பா.ஜ.க.வின் பாசிசத் திட்டங்கள் எல்லாவற்றிகும் ஆட்சியில் இருந்த போது தலையாட்டிவிட்டு, இன்றைக்கு பா.ஜ.க.வை எதிர்க்கின்ற மாதிரி மக்களிடம் காட்டிக்கொண்டு, மறைமுகமாக பா.ஜ.க தலைவர்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கும் கொத்தடிமைக் கூட்டத்திற்குக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் போலவே இந்தத் தேர்தலிலும் படுதோல்வியைப் பரிசாகத் தர வேண்டும்.

இதுவரை மக்களை ஏமாற்றிய பா.ஜ.க. - அ.தி.மு.க. இந்தத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட இருக்கிறது. மக்களின் இந்தக் கோபத்தை நமக்கான வாக்குகளாக மாற்ற வேண்டிய கடமை வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களான உங்களுக்கு இருக்கிறது.

**கழகத்திற்கு உழைத்தவர்களை - கழகம் ஒருபோதும் கைவிடாது!**

கட்சிக்காக உழையுங்கள்! மக்களுக்காக உழையுங்கள். அதற்கு உரிய பலன் உங்களைத் தேடி வரும்! இயக்கத்திற்காக இரவு பகல் பாராமல் உழைத்தவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அவர்களை கழகம் எப்போதும் கைவிடாது.

இயக்கத்திற்காக ரத்த நாளங்களாக உழைக்கும் வாக்குச்சாவடி முகவர்களே! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களிடம் வேண்டுகோள் வைத்து உரையாற்றி இருக்கிறேன்.

அடுத்த முறை உங்களைச் சந்திக்கும்போது, நான் வெற்றிச் செய்தியைத்தான் கேட்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்! உழைப்போம்! உழைப்போம்!

நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# ஒரே நாடு, ஒரே தேர்தல் பா.ஜ.க.வின் திசைதிருப்பும் தந்திரம்!

## ராகுல் காந்தி கண்டனம்!



புதுடெல்லி, செப். 26-
உண்மையான பிரச்சினைகளில் இருந்து மக்களைத் திசைதிருப்பும் பா.ஜ.க.வின் தந்திரங்களில் ஒன்றுதான் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ திட்டம் என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிர்பாராத முடிவு கிடைக்கும்’ என்றும் அவர் கூறினார்.

அஸ்ஸாமின் பிரதிதின் மீடியா நெட்வொர்க் சார்பில் தில்லியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் ராகுல் காந்தி பங்கேற்றுப் பேசியதாவது:

சொத்துகள் ஓரிடத்தில் குவிதல், பொருளாதார ரீதியில் பெரும் ஏற்றத் தாழ்வுகள், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு, தாழ்த் தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் பெரும் அநீதிகள், கடுமையான விலைவாசி உயர்வு போன்றவை, நாட்டில் தற்போது நிலவும் உண்மையான பிரச்சினைகளாகும்.

ஆனால், இப்பிரச்சினைகளில் இருந்து மக்களைத் திசைதிருப்ப பல்வேறு தந்திரங்களை பா.ஜ.க. கையாண்டு வருகிறது. ‘ஒரே நாடு,

ஒரே தேர்தல் திட்டம், பகுஜன் சமாஜ் எம்.பி. டேனிஷ் அலி குறித்து பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் பிதூரி பேசிய சர்ச்சை கருத்து, இந்தியாவின் பெயர் விவகாரம் போன்ற அனைத்துமே பா.ஜ.க.வின் திசைதிருப்பும் தந்திரங்கள்.

ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று நாங்கள் கோரி வருகிறோம். இந்திய மக்கள் எதிர்பார்க்கும் அடிப்படையான விஷயம் ஜாதி வாரி கணக்கெடுப்பு என்பது பா.ஜ.க.வுக்கும் தெரியும். ஆனால், இதுகுறித்து விவாதிக்க அவர்கள் விரும்பவில்லை.

ஜாதிவாரி கணக்கெடுப்பு கோரிக்கையை எழுப்பும்போதெல்லாம், திசைதிருப்பும் தந்திரத்தில் பா.ஜ.க. ஈடுபடுகிறது. ஆனால், அந்தத் தந்திரத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும் என்றார் ராகுல்.

எதிர்வரும் பேரவைத் தேர்தல்கள் குறித்து ராகுல் பேசியதாவது:

மத்தியபிரதேசத்திலும், சத்தீஸ்கரிலும் காங்கிரஸ் வெல்வது உறுதி. தெலங்கானாவில் காங்கிரஸுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது. ராஜஸ்தானில் கடும் போட்டி இருந்தாலும், காங்கிரஸால் வெல்ல முடியும்.

கர்நாடக பேரவைத் தேர்தல் எங்களுக்கு மிக முக்கியப் படிப்பினையைக் கற்றுத்தந்தது. பா.ஜ.க.வின் திசைதிருப்பும் முயற்சியை முறியடித்து, மக்கள் மத்தியில் எங்களது தெளிவான கண்ணோட்டத்தை முன்வைத்தோம். அதன் வாயிலாக எங்களுக்கு வெற்றி கிடைத்தது என்றார்.

**‘பா.ஜ.க.வுக்கு எதிர்பாராத முடிவு’**: ‘ஊடகங்களை பா.ஜ.க. கட்டுப்படுத்தி வரும் தற்போதைய சூழலில், எதிர்க்கட்சிகள் அதற்கேற்ப தகவமைத்துக் கொண்டு, ஒன்றுபட்டு பணியாற்றி வருகிறோம். இன்று இந்தியாவின் 60 சதவீத மக்கள்தொகையை நாங்கள் (எதிர்க்கட்சிகள்) பிரதிபலிக்கிறோம். எனவே, 2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிர்பாராத முடிவு கிடைக்கும்’ என் றார் ராகுல்.

**‘அரசு நினைத்தால் நாளையே மகளிர் இடஒதுக்கீடு’**: அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரில், மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து பேசிய ராகுல், ‘அரசு நினைத்தால் நாளையேகூட மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த முடியும். அதற்கு மக்கள் தொகை கணக்கெடுப்போ அல்லது தொகுதி மறுவரையறையோ தேவையில்லை.

அதானி விவகாரத்தில் புதிதாக வெளியான தகவல்களில் இருந்து மக்களைத் திசைதிருப்பவே நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரை மத்திய அரசு நடத்தியுள்ளது.

10 ஆண்டுகளுக்கு பிறகு இட ஒதுக்கீட்டு பலனை மகளிர் பெறலாம் என்று மத்திய பா.ஜ.க. அரசு கூறுகிறது. ஆனால், மகளிர் இட ஒதுக்கீடு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் விரும்புகிறது’ என்றார். மக்களவை, பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் சில தினங்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதாவின்படி, மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறுவரையறைக்குப் பிறகு மகளிர் இடஒதுக்கீடு அமலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில்

# நெல்லை - தூத்துக்குடி - தென்காசி மாவட்டங்களில் திட்டப் பணிகள்!

### அமைச்சர் கே.என்.நேரு நேரில் ஆய்வு! பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்பு!

நெல்லை, செப்.26-
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நெல்லை,தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு கூட்டம்

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது,நிகழ்வில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து விழா பேருரை ஆற்றினார். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் சிறப்புரையாற்றினார். உடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன்,நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு, குடிநீர் வடிகால் வாரியம் மேலாண்மை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குனர் கிரன் குர்ராலா குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர் சரவணன், மாவட்ட ஆட்சியர்கள் கார்த்திகேயன் (நெல்லை) ரவிச்சந்திரன் (தென்காசி) செந்தில்ராஜ் (தூத்துக்குடி) நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான், தனுஷ் எம்.குமார் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப், மார்க்கண்டேயன், ராஜா, சதன் திருமலை குமார், சண்முகையா,மாநகராட்சி மேயர்கள் சரவணன் (நெல்லை)ஜெகன் பெரியசாமி (தூத்துக்குடி) மகேஷ் (நாகர்கோவில்) மாநகராட்சி ஆணையாளர்கள் சிவகிருஷ்ணமூர்த்தி (நெல்லை)தினேஷ் குமார் (தூத்துக்குடி) ஆனந்தமோகன் (நாகர்கோவில்)துணை மேயர் ராஜ் உள்பட பலர் உள்ளனர்.

## வேலூர் சங்கரன்பாளையத்தில்

# கலைஞர் நூற்றாண்டு விழா! 6 இடங்களில் கொடி ஏற்றி இனிப்பு வழங்கல்!

### தி.அ.முகமது சகி - ப.கார்த்திகேயன் பங்கேற்பு!

வேலூர், செப்.26-
வேலூர் மாநகர தி.மு.க. உட்பட்ட வேலூர் சட்டமன்றத் தொகுதி தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கழக 75 ஆம் ஆண்டு பவளவிழாவையொட்டி 100 இடங்களில் கழக இருவண்ணக்கொடியேற்றி பொதுமக்களுக்கு உணவு வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக வேலூர் மாநகரம் சங்கரன் பாளையம் பகுதியில் பகுதி செயலாளர் ஜி.பாலமுரளிகிருஷ்ணா ஏற்பாட்டில் 6 இடங்களில் தலைவர் கலைஞர் 100 என்ற கல்வெட்டு அமைத்து கழக இருவண்ணக்கொடியை மாநகர செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன் ஏற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவரும் கழக தணிக்கைக்குழு உறுப்பினருமான தி.அ. முகமது சகி முன்னிலை வகித்தார்.

மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகர துணைச் செயலாளர்கள் ஏ.ஆர்.முன்னா ஷெரீப், ஒய்.தேவநேசன், பகுதி கழகச் செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி, தி.அ.முன்னவர் பாஷா, ஆர்.சத்தியமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கதிரேசன், மா.ப. அன்புநிதி, மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் எம்.நூருல்லா, மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் நா.சுப்பிரமணி, மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் வேலூர் ஜி.ரமேஷ், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.ஆர்.அசோக், மாவட்ட இலக்கிய அணி துணை செயலாளர் சி.எஸ்.அருணகிரி,

மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.எம். ஸ்ரீதர், ராபர்ட் சல்டான, கழிஞ்சூர் கண்ணன், பகுதி கழக நிர்வாகிகள் யோகராஜ், தேவராஜ், கலாவதி ராஜா, பரசுராமன், கார்த்திகேயன், ராஜா, சரவணன், ஜான்பாஷா, ரமேஷ், கணேசன், பிரேம்குமார், சத்தீஷ், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.செல்வமணி, ஜெ.ஜெயபிரகாஷ், எஸ்.மோகன், வி.ஜெய்சங்கர், வி.எஸ்.முருகன், நீதி (எ) அருணாச்சலம், அப்பு (எ) தனசேகரன், எம்.மகேந்திரன், தொண்டரணி எம்.அந்தோணி, என்.எஸ்.ரவி, பகுதி துணைச் செயலாளர் டி.ஜெயகாந்தன், வழக்கறிஞர் என்.ராஜா, ஏ.உமாசந்திரன், கலாப்பா, ஆர்.அருண், ஷமி குமார், ஜெ.கே. குமார், துபாய் சீனு, திருநாவுக்கரசு, விஜய், வி.ஜி.கோபி, அப்பு (எ) முத்துகுமரன், விக்னேஷ்வரன், சண்முகம், முகமது அலி, பாலாஜி, அன்பு, அண்ணாமலை, மோகன், முல்லை, மாமன்ற உறுப்பினர்கள் காசு.சண்முகம், எஸ்.விஜயகுமார், டி.திருப்பாவை, தபசும்பர்வின், கோகிலா, மற்றும் 44,48, 50, 51, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக மாநகர பிரதிநிதி வி.ஆர்.பூபதி நன்றி கூறினார்.

## கவியரங்கம் - வாழ்த்தரங்கம் - வாழ்க்கை வரலாற்று ஆவணப் படம் திரையிடல்!

# கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் 90வது பிறந்தநாள் தொடக்க விழா!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. - திருச்சி சிவா எம்.பி. - தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. வாழ்த்துரை!

சென்னை, செப். 26-
கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் 90வது பிறந்த நாள் தொடக்க விழா. வாழ்க்கை வரலாறு ஆவணப் படம் திரையிடல் நிகழ்ச்சி 28.9.2023 வியாழன் பிற்பகல் 3 மணி முதல் இரவு 7.30 மணி வரை கோட்டூர்புரம் தமிழ் இணையக் கல்விக் கழக அரங்கத்தில் (அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகில்) நடைபெறுகிறது.

பிற்பகல் 3 மணிக்கு கண் திறக்கும் கவி வானம் நிகழ்வில் கவிஞர் கவிமுகில் வரவேற்புக் கவிப் பாடுகிறார். கவிஞர் கபிலன் தொடக்க கவிப் பாடுகிறார். நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தலைமை வகித்து வாழ்த்துகிறார்.

இந்நிகழ்வில் கவிஞர் யுகபாரதி, கவிஞர் தமிழமுதன் பேராசிரியர் கவிஞர் அப்துல் ரசாக் ஆகியோர் கவிதைப் படைக் கின்றனர்.

இதையடுத்து, மலர் வானம் புகு காதை - வாழ்த்தரங்கத்தில் பேராசிரியர் இராம.குருநாதன் தொடக்க உரையாற்றுகிறார்.

வி.ஐ.டி. பல்கலைக் கழக வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் தலைமை உரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, மூத்த வழக்கறிஞர் சிகரம் செந்தில்நாதன், ரகமத் அறக்கட்டளைத் தலைவர் மு.முஸ்தபா, தஞ்சை பாரத் கல்வி நிறுவனங்கள் தாளாளர் புனிதா கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

அடுத்து, புத்தகம் மலரும் பொன்மாலைப் பொழுது - நூல் வெளியீடு நிகழ்வுக்கு வழக்கறிஞர் அ.அருள்மொழி தொடக்கவுரையாற்றுகிறார்.

ஈரோடு தமிழன்பனின் 82 கவிதை நூல்களின் பெருந்தொகுப்பு எரிதழலும் இளங்காற்றும், தி.அமிர்தகணேசன் எழுதியுள்ள ‘நம் கால மகாகவி’ (ஒரு வாசக நோக்கில்) நூல்களை நீதியரசர் ச.ஜெகதீசன் தலைமையேற்று வெளியிடுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நூலினை பெற்று உரையாற்றுகிறார்.

சென்னை பல்கலைக் கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவர் பாரதி - பாரதிதாசனியல் அறிஞர் ய.மணிகண்டன் ஆய்வுரையாற்றுகிறார்.

நிறைவின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 3.8.2023 அன்று வெளியிடப்பட்ட ஈரோடு தமிழன்பன் வாழ்க்கை வரலாற்று ஆவணப்படம் ‘மகாகவி’ திரையிடல் நிகழ்வு நடைபெறுகிறது. இதில் இயக்குநர் அமீர் அப்பாஸ், கவிஞர் தி.அமிர்தகணேசன், விழிகள் தி.நடராசன், பேரா.ஆதிரா முல்லை, கவிஞர் புனிதஜோதி, கவிஞர் வித்யா மனோகர் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக மாணவர் அணி மாநில செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., இணை செயலாளர் பூவை.ஜெரால்டு ஆகியோரின் ஆலோசனையின் பேரில் மாநில துணை செயலாளர் திருமதி.வீரமணி, மாணவர் அணி பொறுப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களிடம் நேர்காணல் நடத்திய போது எடுத்தபடம். உடன் மாநகர் மாணவர் அணி அமைப்பாளர் த.துரை கோபால்சாமி மற்றும் துணை அமைப்பாளர்கள் சி.திருப்பதி, எம்.எஸ்.மதன்மோகன், ஜி.சந்துரு, பி.அரிசங்கர், பி.நித்யதர்ஷினி உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.